# நேதாஜி படிப்பகத்தின் கோல்டன் மெம்பர் திட்டம்

வைர விழாவை கடந்து வெற்றி நடை போடும் தூத்தூர் நேதாஜி படிப்பகம் (NLT), தூத்தூர் மக்களிடவும் தூத்தூர் பகுதியிலுள்ள அனைத்து ஊர் மக்களிடவும் நல் மதிப்பை பெற்றிருப்பதோடு மாநில அளவிலும் சிறந்த புகழுடன் விளங்குகிறது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

நேதாஜி படிப்பகம் பெருமைக்குரிய கோல்டன் மெம்பர் திட்டத்தை 23-01-2018 அன்று அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்தின் வழியாக நேதாஜி படிப்பகத்தின் நலம் விரும்பிகள் ஒவ்வொருவரும் தங்களை நேதாஜி படிப்பகத்தின் ஒரு கோல்டன் மெம்பராக பதிவு செய்து நேதாஜி படிப்பகத்தின் வருடாந்தர செலவுகளுக்கு தோள் கொடுக்கலாம்.

தூத்தூரை சார்ந்த அல்லது தூத்தூரில் திருமணம் செய்துள்ள யாவரும் தங்களை கோல்டன் மெம்பராக பதிவு செய்து கொள்ளலாம். கோல்டன் மெம்பர்களின் வருட சந்தா ரூபாய்.1000/- ஆகும்.

கோல்டன் மெம்பர்களுக்கு கோல்டன் மெம்பர் அடையாள அட்டை, வாகனத்தில் ஒட்டுவதற்கான ஸ்டிக்கர், கோல்டன் மெம்பர் ஷீல்டு கொடுக்கப்படும். மேலும், வருடம் ஒருமுறை நேதாஜியின் கோல்டன் மெம்பேர்ஸ் கூட்டம் நடைபெறும். கோல்டன் மெம்பேர்ஸ் கூட்டத்தில் பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, படிப்பகத்தின் வளர்ச்சிக்கான "கோல்டன் பரிந்துரைகள்" படிப்பக நிர்வாகத்திடம் கொடுக்கப்படும். இந்த "கோல்டன் பரிந்துரைகள்" தொடர்ந்து வரும் செயற்குழு, புதுக்குழு கூட்டங்களின் விவாதிக்கப்பட்டு அதனடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படும்.

**கோல்டன் மெம்பராக இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள் !**

கோல்டன் மெம்பர் விண்ணப்ப படிவம் படிப்பக அலுவலகத்தில் உள்ளது. உங்களது புகைப்படம் மற்றும் இதர தகவல்களுடன் படிப்பக அலுவலரை உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

ஆன்லைன் (இணையம்) வழியாக கோல்டன் மெம்பராக விரும்புவர்கள், Thoothoor.COM -> Organization -> NLT என்ற பகுதிக்கு சென்று, அதில் இணைக்கப்பட்டிருக்கும் கோல்டன் மெம்பர் பதிவு படிவத்தை பயன்படுத்தி கோல்டன் மெம்பராக சேரலாம்.

குறிப்பு: நேதாஜி படிப்பகத்தின் ரெகுலர் மெம்பர்கள், லைஃப் மெம்பர்கள், ஸ்போர்ட்ஸ் மெம்பர்கள் ஆகியோர்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் கோல்டன் மெம்பர்களுக்கும் உள்ளன.

கோல்டன் மெம்பர் திட்டம் பற்றிய மேலும் விபரங்களுக்கும், சந்தேகங்களுக்கும் படிப்பக நிர்வாகிகளையோ, படிப்பக அலுவலரையோ தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி !